# பத்திரிக்கைச் செய்தி

## வீட்டு வரி நிர்ணயம் செய்து பெயர் மாற்றம் செய்ய லஞ்சம் வாங்கிய பஞ்சாயத்து எழுத்தர் கைது

புகார்தாரர் திரு.சண்முகசுந்தரம், இல்லத்தார் தெரு, வீரவநல்லூர் கிராமம், திருநெல்வேலி மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் வீரவநல்லூர் கிராமத்தில் புதிய வீட்டை வாங்கி சார் பதிவாளர் அலுவலகம், வடக்கு வீரவநல்லூர் கிராம அலுவலகத்தில் பதிவு செய்து உள்ளார். புகார்தாரர் தான் புதிதாக வாங்கிய வீட்டிற்கு வீட்டு வரி நிர்ணயம் செய்து பெயர் மாற்றம் செய்ய வடக்கு வீரவநல்லூர் கிராம பஞ்சாயத்து அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். திரு.சொக்கலிங்கம், பஞ்சாயத்து எழுத்தர், வடக்கு வீரவநல்லூர் கிராம பஞ்சாயத்து அலுவலகம், திருநெல்வேலி அவர்கள் புகார்தாரரின் விண்ணப்பத்தினை பரிந்துரை செய்து மேலனுப்ப தனக்கு ரூ.3,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டுமென கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், திருநெல்வேலி லஞ்ச ஒழிப்பு பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 28.01.2023, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு திரு.சொக்கலிங்கம், பஞ்சாயத்து எழுத்தர், வடக்கு வீரவநல்லூர் கிராம பஞ்சாயத்து அலுவலகம், திருநெல்வேலி அவர்கள் லஞ்ச பணம் ரூ.3,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.